1804

Registered No. M. 1368.

ஓம்

தருமசீலன்.

பத்திராதிபர்: தி. ஆதிநயினர்.

புத்தகம் 7 | இரத்தாட்சி ஞு ஆடி மூ 1924 ஞு ஆகஸ்டு மூ | சஞ்சிகை 4.

விஷய சூசிகை.

விஷயம்.		பக்கம்.
1.	நீதிச் செய்யுட் சிந்தாமணி	... 57
2.	தீராக்கோபம் போராய் முடியும்	... 58
3.	இரகு வம்சம்	... 59
4.	ப்ரஸ்னோத்தர மாணிக்யமாலா	... 69
5.	கூட்டுறவாளர்க்கேற்ற சில துறை	... 72
6.	செய்ந்நன்றியறிதல்	... 76
7.	செய்யுட்கதைகள்	... 79

வருஷசந்தா ரூபா 1.] 1924. [தனிப்பிரதி அணா 0-2-0

DHARMASEELAN PRESS. MADRAS

தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதத்தோறும் வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்களில் வெளிவராத நூல்கள், அறிவை விருத்தி செய்யத்தக்க பல நீதிகள், வியாசங்கள், பல விநோதக்கதைகள், நாவல்கள், பொது வர்த்தமானங்கள் முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

சந்தாவிவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய விடங்களுக்கு ரூபா 1—0—0.

பிநாங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச்சஞ்சிகை விலை அணா 0—2—0.

கவனிப்பு

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் தங்கள் முழு விலாசத்தையும் சுத்தமாக எழுதி யனுப்பவேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. மிலாவது பத்திரிகை பெற்றுக் கொள்ளவேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினால் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுத வேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களே எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக் கூட்டவும் குறைக்கவும் நமக்குப் பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு	ரூபா	10—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூபா	6—0—0
கால் பக்கத்திற்கு	ரூபா	3—0—0

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிகயினார் "தருமசீலன்" ஆபீஸ்,

26, ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை

ஓம்

தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 7	இரத்தாட்சி௵ ஆடி௴ 1924௵ ஆகஸ்டு௴	சஞ்சிகை 4.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

ஸ்திரீ போகத்தை விரும்பினோர் தீக்கதிகளுட் சேர்வ ரென்பது.

" பனிமதி யின்கதிர் பருகு மாம்பல்போன்
முனிமதி முகத்தியர் முறுவ னம்பினோர்
துனிவளர் கதிகளுட் டோன்றி நாடகம்
கனியநின் றுநவர் கடையில் காலமே."

(இ-ள்.) சந்திரனைக் கோபிக்கின்ற அழகுவாய்ந்த முகத்தையுடைய பெண்களின், குளிர்ந்தது அச்சந்திரன கிரணத்தை கிரகிக்கின்ற செவ்வல்லிபோன்றதும், பற்களையுடையதுமாகிய வாயை விரும்பினவர்கள், முடிவில்லாத காலமெல்லாம், துன்பங்கள் வளர்கின்ற தீக்கதிகளிலே பிறந்து வெவ்வேறுடம்புகளைக் கொண்டு அவற்றிலே நின்று, அவற்றிற்குரிய துன்பச் செய்கைகளாகிற நாடகத்தை முற்ற ஆடுவர். (அதாவது அந்த யாக்கைகளைக் கொண்டு துன்புற்றுத் திரிந்தலைவர்)" என்பதாம்.

பெண்களின் சேர்க்கையை விரும்பினால் அவ்விருப்பமானது தவத்திற் சேரவிடாமல் உலக பந்தத்திலேயே புகுத்தி மேலும் மேலும் கெட்ட காரியங்களையே செய்யத் தூண்டுமாதலின், அவ்வாறு மாதரை விரும்பிய மனிதன், அத்தீச் செயல்களையே செய்து பற்பல பிறவிகளை யெடுத்துத் தீக்கதிகளுட் புகுந்து புகுந்து வருந்துவான்; அவனுடைய பிறப்பு நீங்குதற் கேதுவில்லாமற் போகும். ஆதலின், ஜன்மம் நீங்கி நற்கதியடைய விரும்புவோன், பெண்ணாசையை அகற்றித் துறவுபூண்டு தவஞ்செய்ய வேண்டுமென்பது இதன் கருத்து.

சந்திரகிரணத்தைப் பருகி மலர்தல் ஆம்பல் மலரின் இயற்கை; ஆம்பல் வாய்க்குபமானம். 'முனிமதி' என்பதை, 'மதிமுனி' என மாற்றிக் கொள்ள வேண்டும். மதி, முகத்திற்குவமைப் பொருளாதலின், அதனை முகம் கோபித்தல் இயற்கை. முறுவல்-ஆகு பெயராய் அதனையுடைய வாயை உணர்த்தி நின்றது. நாடகம் ஆடுதல்-உலக வியவகாரத்தில் திரிந்தலைதல்; அச்செய்கை நடிப்புடையதாதலின் நாடகமெனக் கூறப்பட்டது. நாடகம் - உவமையாகு பெயர். பனி-குளிர்ச்சி. முனிதல்-கோபித்தல். துனி-துன்பம். கனிய-முற்ற.

(சீவகசிந்தாமணி 1554)

தில்லை; மெய்யான இன்சொல்லையே கூறினான்; அரசர்கள் தசரத னிடமிருந்து உதயத்தையும் நாசத்தையும் அடைந்தனர். வினை னில் அவன் தன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்கு நண்பனாயி னான்; எதிர்ப்பவர்க்கு விரோதியாயினன்.

பின்பு தசரதன், அம்பை நாண்கயிற்றி லேற்றியவனாய், சமுத் திரத்தினால் சுற்றப்பட்ட பூமியை ஒரே தேரினால் ஜயித்தனன்; வேழங்களும் வேகமுள்ள குதிரைகளும் நிறைந்த அவன் சேனை, அவனுடைய வெற்றியை மட்டும் பிரசித்தப்படுத்தியது. இரகஸ்ய மான இரதத்தினால் பூமியை ஜயித்தவனும், வில்லை யுடையவனும், குபேர ஸம்பத்தை யுடையவனுமான தசரதனுக்கு மேகம்போல் கர்ஜ்ஜிக்கும் கடல்களே வெற்றியை அறிவிக்கும் துந்துபி வாத்தி யங்களாக ஆயின. *புரந்தரன் ஆயிரம் முனைகளையுடைய 'குலிச த்தினால் பர்வதங்களின் †பக்ஷபலத்தை நாசஞ் செய்தானன்றோ? அவ்வாறே அன்றலர்ந்ததாமரை மலரைப்போன்ற முகத்தையுடைய தசரதனும் அம்புகளை வர்ஷிக்கின்றதும், சப்திக்கின்றதுமான வில் லால் பகைவரின் பக்ஷபலத்தை அழித்தனன். தேவர்கள் இந்தி ரனை வணங்குவதுபோல, ஆயிரக்கணக்கான அரசர்கள், குறைவுறாத சௌரியமுடைய தசரதன் பாதங்களில் அவனது, நகங்களின் காந் தியினால் சிறப்படைந்த தமது முடிமணியின் கிரணங்களோடு ஸ்பரி சித்தனர். (வணங்கினர்.) அவ்வரசன், மந்திரிகள் மூலமாய்த் தமது புதல்வரின் நமஸ்காரத்தைத் தெரிவித்தவர்களும், சிங்காரித்துக் கொள்ளாதவர்களுமான பகைவர் மனைவிகளிடம் கருணைகூர்ந்து, சமுத்திரக் கரையிலிருந்து அளகாபுரியைப் போன்ற "அயோத்தி"க் குத் திரும்பினான். பிறர் கிடைக்கப் பெறாத வெண்குடையையும் அக்னியைப்போன்ற தேஜஸ்ஸையும், சந்திரனைப்போன்ற காந்தி யையும் பெற்றவனான தசரதன், சக்கிரவர்த்தியாயிருந்தும், "லக்ஷ் மிதேவி, ஏதேனும் பிழை நேரின் நழுவி விடுவள்" என்று ஆலோ சித்து, சோம்பலற்ற (விழிப்புள்ள)வனாக இருந்தனன்.

இந்திரனுக்கு முன்னே செல்லுகின்றவனும், ஒரே தேரை யுடையவனும், பலம் பொருந்தியவனும், வில்லாளியுமான தசரதன், அடிக்கடி சூரியனை மறைத்துக்கொண்டு எழும்பும் புழுதிகளை அஸு ரர்களின் உதிரத்தினால் மறைத்து விட்டான்.

---

* புரந்தரன் = இந்திரன்.

† பக்ஷபலம் = இறக்கைகளின் வன்மை; இனத்தாரின் பலம்

கையில் தாமரைமலரைப் பெற்றவளும், பதிவிரதையுமான ஸ்ரீதேவி, இரவலரை நன்கு மதிப்பவனும் ககுஸ்தகுலத்திற் பிறந்தவனுமான தசரதனையும் திருமாலையும்விட்டு, வேறு அரசனைச் சேவிப்பளோ? மலைகளின் பெண்களான நதிகள் * வாரிதியை கணவனாகப் பெற்றமைபோல, கற்பரசிகளான கௌஸல்யையும், கைகேயியும், ஸுமித்திரையும் பகைவரையழிக்கும் கணையைப்பெற்ற தசரதனைப் பதியாகப்பெற்றனர். பகைவரையொழிக்கும் உபாயங்களில் வல்லவனான தசரதன் மூன்றுமனைவிகளோடு சேர்ந்திருக்கையில், தேவர்கோனை பிரஜைகளை சிக்ஷிக்க விரும்பி, † மூன்று சக்திகளோடு பூமியில் வந்திருப்பதுபோல, விளங்கினான். மகாரதனான தசரதன், போர்க்களத்தில் இந்திரனுக்கு உதவிசெய்து, கணைகளால் பயத்தைப்போக்கினமையால் தேவஸ்திரீகள் இவனுடைய புஜபராக்கிரமத்தைக் குறித்துக் கானஞ்செய்தனர். யாகநிமித்தம் முடியை இறக்கியவனும், தமோகுணமற்றவனுமான தசரதன், தன் கைவன்மையால் சம்பாதித்த பொருள் முழுவதையும் வேள்வியில தானஞ்செய்துவிட்டு, தமஸா நதிக்கரையிலும் ஸரயூ நதிக்கரையிலும் ஸ்வர்ணத்தாலாகிய ‡ யூபஸ்தம்பங்களை நாட்டி, அவற்றை விளங்கச்செய்தனன். § அஷ்டமூர்த்தியாகிய பகவான், ‖ அஜினத்தையும், தண்டத்தையும், தருப்பைகளாலாகிய அரைஞாணையும், மௌனத்தையும், தினவு தீர்த்துக்கொள்வதற்காக மான்கொம்பையும், யாகத்தில் தீக்ஷையையும் பெற்று விளங்கும் தசரதனுடைய சரீரத்தை மிகக் காந்தியுண்டாகுமாறு விளங்கச் செய்தனன். அவபிருதஸ்நானத்தினால் பரிசுத்தியுள்ளவனும் இந்திரியங்களை ஜயித்தவனும், தேவஸபைக்குச் செல்லத்தக்கவனுமான தசரதன், தனது உன்னதமான சிரஸால் ஜலத்தை வருஷிக்கும் இந்திரனை மட்டும் வணங்கினான்.

பின்னர் வஸந்த காலமானது, நடுவு நிலைமையில் யமனையும் கொடையில் குபேரனையும் அடக்கியாளுவதில் வருணனையும் ஐசுவரியத்தில் இந்திரனையும் ஒத்தவனும், சிறந்த பராக்கிரமமுள்ளவனுமான தசரதனைச் சேவிப்பதற்கு வருவதுபோல, புதிய மலர்களோடு வந்து சேர்ந்தது. அருணனைக்கொண்டு குதிரைகளைத் திருப்புமாறு செய்த சூரியன், குபேரன் வசிக்கும் திசைக்குச் செல்லவிரும்பி, பனியை

* வாரிதி = கடல். † மூன்று சக்திகளாவன = பிரபு சக்தி, மந்திர சக்தி, உத்ஸாகசக்தி. ‡ யூபஸ்தம்பங்கள் = வேள்வித் தூண்கள். § அஷ்டமூர்த்தி = பூமி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், யஜமானன் ஆகிய எண்வகை உருவமுடையவர். ‖ அஜினம் = தோல்

உலர்த்திக் காலை வேளையை நிர்மலமாக்கியவனும், மலய பர்வதத்தை விட்டுத் திரும்பினான். வஸந்தன், முதலில் மலரின் உற்பத்தியையும் பின்பு இளந்தளிர்களையும் அதன் பிறகு குயிலின் ஒலியையும் முறையே பெற்று விருக்ஷங்களால் நிறைந்திருக்கும் வனத்தில் பிரவேசித்தனன். இரவலர்கள் நீதி யென்னும் குணத்தை யுடையதும் நல்லோருக்கு உதவுவதையே பயனாகக் கொண்டதுமான தசரதனது செல்வத்தை யடைவதுபோல, வண்டுகளும், நீர்ப் பறவைகளும் வஸந்தனால் போஷிக்கப்பட்டனவும் ஓடையிலுள்ளனவுமான தாமரை மலர்களைப் பெற்றன. ருதுவில் உண்டான புதிய அசோக தருவின் பூ மாத்திரம் சிற்றின்பத்தை வளர்க்கவில்லை; ஆனால் காதலர்களுக்கு மதத்தை யுண்டாக்குவதும், காதலிகளின் செவிகளில் வைக்கப்பட்டதுமான தளிரும் சிற்றின்பப் பிரியத்தை வளர்த்தது. பூங்காவின் ஸ்ரீதேவிக்கு வஸந்தன் செய்திருக்கும் *மகரிகா பத்திரங்களைப் போன்றவைகளும் மதுவை யளிப்பதில் வல்லமையுள்ளவைகளுமான † குரவக மரங்களின் மதுவை யருந்தி வண்டுகள் கானஞ் செய்தன. காதலியின் முகமதுவினால் வெளிக்கிளம்பி மலர்ந்ததும் அம்மதுவின் வாசனையையுடையதுமான புஷ்பம், மதுவைக் குடிப்பதில் பற்றுள்ளவைகளும், கூட்டமாக வருகின்றவைகளுமான வண்டுகளால் மகிழ மரத்தை நிரப்பியது.

வஸந்த லக்ஷ்மியினால் புரச மரத்தில் கிளம்பிய மொக்குக்கூட்டம், மதத்தினால் நாணமற்ற காதலி, காதலனிடம் நகங்களால் கீறியிருப்பதுபோல, விளங்கியது. சூரியன், பற்களால் கடிபட்ட காதலிகளின் அதரங்களை வருத்துகின்றதும், குளிர்ச்சியினால் இடுப்பில் ஒட்டியாணத்தைப் போடாமற் செய்ததுமான பனியை முழுவதும் போக்குவதற்கு வல்லவனாக வில்லை; ஆனால், பனியைக் குறைவுறச் செய்தனன். ‡ அபிநயங்களை அப்பியசிப்பதற்கு முயற்சியுள்ளது போன்றதும், தென்றலால் அசையும் தளிர்களை யுடையதும், மொக்குகளுடன் கூடியதும், மாமரத்தில் படர்ந்ததுமான கொடியானது இராகத்துவேஷங்களை வென்றவர் மனத்தையும் மயக்கியது.

நறுமணமுள்ள மலர்களால் நிறைந்த காடுகளில் குயில்கள் முதலில் மிதமாகக் கூவிய சொற்கள், அற்பமாகப் பேசும் சிறு

---

* கஸ்தூரி முதலியவற்றால் மங்கையரின் கொங்கைகளில் எழுதப்பட்ட அன்னம் முதலிய பிரதிமைகளுக்கு "மகரிகாபத்திரங்கள்" என்று பெயர்.

† குரவகம் = பெருங்குறிஞ்சி மரம்.

‡ அபிநயம் = கைஜாடை முதலியவற்றால் அபிப்பிராயத்தைத் தெரிவித்தல்.

பெண்களின் வார்த்தைகளைப்போ லிருந்தன. செவிகளுக் கின்பமளிக்கும் வண்டுகளின் ரீங்காரத்தையும் மலர்களென்னும் இனிய பற்களின் காந்தியையும் பெற்ற பூங்காவிலுள்ள கொடிகள், காற்றினலசையும் தளிர்களால், கைகளால் அபிநயிப்பதுபோல விளங்கின. மங்கையர்கள், புதிய காதற்குறிப்புகளை யுண்டாக்குவதில் வல்லமையுள்ளதும், நறுமணத்தால் * கேஸர மலரை வென்றதும், சிற்றின்பத்தை வளர்ப்பதுமான மதுவைக் காதலர்களோடு அன்புடன் பருகினர். மலர்ந்த தாமரை மலர்களையும் இனிமையாகக் கூவும் நீர்ப்பறவைகளையும் பெற்ற ஓடைகள், புன்னகை பொருந்திய முகங்களையும் ஒலிக்கும் ஒட்டியாணத்தையும் பெற்ற பெண்களைப்போலப் பிரகாசித்தன. வஸந்த காலத்தினால் குறைவுற்றதும், சந்திரோதயத்தில் வெளுத்த முன்னிரவையுடையதுமான இரவென்னும் பெண், காதலன் சேர்க்கையா லேற்படும் சுகத்தைப் பெறாத காதலியைப் போல, குறைவை யடைந்தனள்.

சந்திரன், பனியின்மையால் நிர்மலமான காந்தியுள்ளவைகளும், கலவியா லேற்படும் சிரமத்தைப் போக்குவனவுமான கிரணங்களால், தனது † மகரத்துவஜத்தை மேலே தூக்கிய மன்மதனை உற்சாகப்படுத்தினன். ஜ்வலிக்கும் அக்னியைப்போன்ற காந்தியையுடைய மலைக்கொந்து புஷ்பம், வனதேவதைக்கு ஸ்வர்ணாபரணமாக விளங்கியது; யுவதிகள் இனிய இதழ்களையுடைய அம்மலரைக் காதலர் கொடுத்ததும் வாங்கிக், கூந்தலில் வைத்துக்கொண்டனர். மைத்துளிபோல் மனோகரமானவைகளும், மலர்க்கூட்டங்களில் வந்து விழுகின்றனவுமான வண்டுகளால் நிறைந்த திலக விருக்ஷம், திலகம் மங்கையைக் கவின் செய்வதுபோல, வனப் பிரதேசத்தை அலங்கரித்தது.

மரத்தின் காதற் குறிப்புகளைப் பெற்ற நவமல்லிகைக் கொடி, மதுகந்தமுள்ளதும் தளிரென்னும் அதரத்திலிருப்பதுமான மலரென்னும் புன்னகையினால், பார்ப்போர் மனதை வசியஞ் செய்தது. காதலர்கள் அருணனைப்போல் சிவந்த வஸ்திரங்களாலும், செவிகளிலுள்ள தளிர்களாலும், குயில்களின் சத்தத்தினாலும் இவைபோன்ற காமன்சேனைகளாலும் காதலிகளிடம் பற்றுள்ளவர்களாகவே ஆயினர். வெளுத்ததூள்களால் பருத்த அவயவத்தையும் வண்டுகளின் சேர்க்கையையும் பெற்ற திலக மரத்தின் பூங்கொத்தானது, கூந்த

* கேஸரம் = மகிழமரம்.

† மகரத்துவஜம் = மீன்கொடி.

வில் வைக்கப்பட்ட முத்துக்களைப்போலக் காணப்பட்டது. வண்டுக்கூட்டங்கள், வில்லாளியான மாரனுக்குக் கொடியாயுள்ளதும், வஸந்த லக்ஷ்மிக்கு சோபையைத் தருவதும், முகத்திற்கு வாசனைப் பொடியாயுள்ளதும், காற்றுள்ள உத்யானவனத்தில் உண்டானதுமான மலர்களின் தாதுக்களிலுள்ள தூசியைப் பின் தொடர்ந்தன. புதிதாய் ஊஞ்சலாடும் மாதர்கள், கீழேயுள்ள கயிற்றை எடுப்பதில் வல்லமையுள்ளவர்களா யிருந்தும், சாமார்த்திய மற்றவர்களைப் போலப் பாவித்து, கணவர்களின் கழுத்தைக் கட்டிக் கொண்டனர். குயில்கள், "ஏ மாதர்காள்! கோபத்தை விட்டு விடுங்கள்; சண்டை செய்தது போதும்; சென்ற இளவயது மீண்டும் வருவதில்லை" என்ற மன்மத னபிப்பிராயத்தை வெளியிட்டன; பெண்கள் அதை அநுஸரித்தவர்கள்போல, க்ரீடிக்கலாயினர்.

பின்னர் திருமாலையும் வஸந்தனையும் திருமகனையும் ஒத்திருக்கும் தசரதன் ஸ்திரீகளோடு வஸந்தோத்ஸவத்தைச் சுகமாய் அநுபவித்துவிட்டு, வேட்டையாடுவதற்கு விரும்பினன். வேட்டையாடுவதனால், அசையும் இலக்ஷ்யங்களை அடிப்பதில் பழக்க முண்டாகின்றது. அது பிராணிகள் பயந்திருப்பதையும் கோப மடைந்திருப்பதையும் அறிவிக்கின்றது; சிரமத்தைப் போக்கி உடலை இலகுவாக்குகின்றது; ஆகலால் அரசன் மந்திரிகளிடம் அநுமதி பெற்று வேட்டைக்குச் சென்றான். மான்கள் நிறைந்த காட்டிற்குத் தக்க வேஷம் பூண்டவனும், கழுத்தில் வில்லைச் சாய்த்திக் கொண்டவனும், புருஷ சிரேஷ்டனுமான தசரதன், குதிரைகள் குளம்புகளால் கிளம்பிய புழுதிகளால் ஆகாயத்தை உறையோடு கூடியது போலச் செய்தனன். அவ்வேந்தன், மரங்களின் இலைகளின் நிறத்தை யொத்த கவசத்தை யணிந்தவனாய், * வனமாலையினால் கூந்தலைக் கட்டிக்கொண்டு, கலைமான் கூட்டம் உலாவுமிடத்திற்குச் சென்றனன்; அப்பொழுது அவனுடைய குதிரை வேகமாகச் சென்றமையால், அவன் செவிகளிலுள்ள குண்டலங்கள் அசைந்தன.

மெல்லிய கொடிகளில் மறைந்த சரீரங்களையும் வண்டுகளிடம் செலுத்தின பார்வையையும் பெற்றுள்ள வனதேவதைகள், அழகிய கண்களையுடையவனும், நீதிநெறியால் குடிகளை மகிழ்வித்தவனுமான தசரதனைப் பார்த்தனர். அவ்வேந்தன் காட்டுத்தீயும் கள்வரும் இல்லாமல் சீர்திருத்தப்பட்டதும், சேறற்ற குதிரை வழியை

* வனமாலை = காட்டிலுள்ள கொடி.

யுடையதும், நீர்நிலைகளோடு கூடியதும், மான்களாலும் பறவைகளாலும் *கவயங்களாலும் நிறைந்ததுமான வனத்தில் வேட்டையாட்களையும் வேடர்களையும் முன்னிட்டுக்கொண்டு பிரவேசித்தனன். புரட்டாசி மாதம் (ஆகாயம்) பொன்போல் பலநிறமான மின்னலென்னும் நாண்கயிற்றையுடைய இந்திரவில்லைக் கவர்வதுபோல, மனோவியாதியற்றவனும், புருஷ சிரேஷ்டனும், வில்லின் ஒலியால் சிங்கங்களைக் கோபமுறச்செய்தவனுமான தசரதன், நாணேற்றிய வில்லைக் கிரகித்தனன்.

பின்னர் மான்மந்தையொன்று தசரதனெதிரே காணப்பட்டது; அது, பால்குடிக்கும் தமது குட்டிகளைக்கண்டு அடிக்கடி தயங்கிச் சென்றது; வாயில தருப்பைப்புற்களைக் கவ்விக்கொண்டிருந்தது; கொழுத்த †கிருஷ்ணஸாரம் அக்கூட்டத்தின் முன்னே சென்றது. வேகமுள்ள குதிரைமீதிருக்கும் வேந்தன், அம்பறாத்தூணியினின்றும் அம்பை எடுத்ததும், மான்கள், மந்தையினின்றும் பிரிந்து, காற்றினாலுதிர்ந்த கருநெய்தல் மலரிதழ்கள் கறுப்பாக்குவதுபோல, கண்ணீர் மிகுந்த கடைக்கண் பார்வைகளால் வனத்தைக் கறுப்பாகச் செய்தன. விஷ்ணுவைப்போல் பிரபாவமுள்ளவனும், வில்லாளியுமான தசரதன், பெண்மான், தான்குறிவைத்த ஆண்மானின் தேகத்தைமறைத்து நிற்பதைக் கண்டதும், தானும் காமியானதால் கருணை கூர்ந்து செவிவரையில வளைத்துவிடத் தொடங்கிய அம்பையும் திரும்பக் கொணர்ந்தனன். பயத்தினால் மிரளும் மான்களின் கண்களைப் பார்த்ததும் தசரதனுக்குக் காதலியின் கடைக்கண் பார்வை நினைவிற்கு வந்தது; அதனால் வேறு மிருகங்களைக் குறிவைத்து, அம்பைவிட விரும்பிய அவ்வேந்தனது முஷ்டியானது செவியின் நுனியில் வந்து பேதித்தது.

பின்பு அவ்வரசன் சேற்றுக் குட்டைகளிலிருந்து கிளம்பியோடும் பன்றிக்கூட்டம் செல்லும் வழியைப் பின்தொடர்ந்தனன்; அவ்வழியில் பன்றிகள் சிரமத்தினால் வாயைத் திறந்தபொழுது, ‡முஸ்தை மூலைகளின் கவளங்கள் நழுவி விழுந்திருந்தன; அப்பன்றிகளின் நனைந்த கால்களின் சுவடுகள் பதிந்திருந்தன. அக்காட்டுப் பன்றிகள், குதிரையிலிருந்து சிறிது குனிந்து குறிவைத்து அடிக்கும் தசரதனைப் பிடரியை நிமிர்த்திக்கொண்டு கொல்ல விரும்

---

* கவயம் = பசுவை யொத்த பிராணி.

† கிருஷ்ணஸாரம் = ஓர் வகைப் புள்ளிமான்.

‡ முஸ்தை = நீண்ட துங்க முத்தக்காசு; கோரைக் கிழங்கு.

பின; ஆனால், அப்பன்றிகள், இம்மன்னனது கணைகளால் முதுகை மறைத்திருக்கும் மரங்களில் தாம் அடிபட்டதை அறியவில்லை. இவ்வரசன் தன்னைக் கொல்வதற்கு எதிர்த்துவந்த காட்டெருமையின் கண் துவாரத்தில் இழுத்துவிட்ட கணையானது, அதன் தேகத்தைப் பிளந்துகொண்டு உட்சென்று, உதிரப்படாத காம்பையுடையதாய், முதலில் எருமையை விழச்செய்தது; பின்பு அது விழுந்தது. பிறகு அவ்வரசன், கூரிய கணைகளால், பெரும்பாலும் கட்க மிருகங்களின் தலையிலுள்ள கொம்புகளை முறித்தனன்; ஏனெனில் துஷ்ட நிக்கிரகஞ் செய்யும் தசரதன் பகைவரின் உன்னதமான விஷாணத்தை (பெருமையை) மட்டும் பொறுக்கவில்லை; நீண்ட ஆயுளை யெடுப்பதில் விருப்பமில்லை. பயமற்ற பார்த்திவன் காற்றினால் முறிக்கப்பட்ட புஷ்பித்த வேங்கை மரக்கிளைகளைப்போன்றவைகளும், குகைகளிலிருந்து எதிர்த்து வருகின்றனவுமான புலிகளின் வாய்ப் பொந்துகளில் பழக்கமிகுதியால் கணைகளை நிரப்பி அம்பறாத்தூணி யாக்கினன்.

பின்பு தசரதன் புதர்களில் மறைந்திருக்கும் சிங்கங்களைக் கொல்ல விரும்பியவனாய், அவற்றை இடிமுழக்கம்போல பயங்கரமான நாணின் ஒலியால் கலக்கினான்; ஏனெனில், அவை, சௌரியத்தினால் சம்பாதித்த மிருகராஜன் என்ற பெயரைப் பெறுவதில் தசரதன் அசூயையடைந்திருந்தனன். அடர்ந்து நெருங்கிய முத்தங்கள் பற்றிய கூரிய நகங்களையுடைய சிங்கங்கள், மிக்க உக்கிரங்கொண்டு யானைக் கூட்டங்களின்மீது பாய்ந்து அவற்றின் மத்தகங்களைப் பிளந்து கொண்டிருப்பதைக்கண்ட தசரதன் (உடனே) தன் கணையினால் அச்சிங்கங்களைக் கொன்று வீழ்த்தி, போரில் தனக்கு முதற்படையாய் வந்துதவும் வேழங்கட்கிபற்றுமோர் கைம்மாறாகிய தன் கடனை இங்குச் செலுத்தியதாகக் கருதினன். அவ்வரசன் ஓரிடம் சமர மிருகங்களைத் தொடர்ந்துசென்று, செவிவரையிலிழுத்துப் * பல்லமென்னும் ஆயுதத்தைப் பிரயோகித்து, மன்னவர்களைப்போல, அம்மிருகங்களையும் வென்றுசாமரையற்றனவாகச் செய்துவிட்டுத் திரும்பினான்.

அம்மன்னவன், தனது குதிரையருகே வந்த, அழகிய இறக்கையையுடைய மயிலைக்கண்டதும், பலநிறமான மாலைகளால் நிறைந்ததும் கலவியில் கட்டவிழ்ந்ததுமான காதலியின் கூந்தலை நினைத்த

* பல்லம் = ஈட்டி.

வனைப் அதை அடிக்கவில்லை. மந்தமாருதமானது அவ்வரசன் முகத்தில் களைப்பினால் அரும்பிய வேர்வையைப் பனித்துளிகளோடு வந்து அபஹரித்தது. வேட்டையானது இவ்வாறு பிறகாரியங்களை மறந்து, மந்திரிகளிடம் பூபாரத்தை ஒப்புவித்துத் தொடர்ச்சியாகச் சேவித்தமையால் மிகுந்த காமத்தையுடைய தசரதனைச் சாமர்த்தியமுள்ள மங்கைபோல வசியஞ்செய்தது.

பின்னர் அவ்வேந்தன் ஓரிடம் ஜ்வலிக்கும் ஓஷதிகளென்னும் தீவர்த்திகளால் நிறைந்ததும் மெல்லிய மலர்களாலும் தளிர்களாலும் ஆகியதுமான படுக்கையில், பரிவாரங்களை நிறுத்திவிட்டுச் சயனித்தவனாய் இரவைக் கழித்தனன். காலையில் படக வாத்தியத்தைப்போல் ஒலிக்கும் யானைகளின் செவிகளென்னும் வாத்தியங்களால் நாக்கந்தெளிந்த தோன்றல், அக்காட்டில் பறவைகளின் இனிய சப்தங்களென்னும் மங்கள கீதங்களைக் கேட்டனன்.

பின்பு அம்மன்னவன் பரிவாரங்களையும் விட்டுக் கலைமான்களின் வழியைப் பின் தொடர்ந்து சென்றான்; அப்பொழுது அவன் குதிரை, சிரமத்தினால் நுரையைக் கக்கியது; பின்பு தசரதன் தவசிகளால் நிறைந்த தமஸா நதியை அடைந்தனன். அப்பொழுது தமஸாநதியின் நீரில் குடத்தை அமிழ்த்துவதனால் கம்பீரமான சப்தம் உண்டாகியது; அவ்விடம் அரசன் யானை கர்ச்சிக்கிறதென்று நினைத்து, சத்தம் வந்த வழியை இலக்கு வைத்து அம்பை விட்டனன். தசரதன் செய்த காரியமானது அரசர்களுக்கு நிஷித்தமானதே; அறிவாளிகளும் ரஜோகுணத்தினால் மூடப்பெற்றவர்களாய், துர்மார்க்கத்தில் பிரவேசிக்கின்றனர். பின்பு அரசன், "ஐயோ! அப்பா!" என்னும் அழுகைக் குரலைக்கேட்டு, திக்கித்தவனாய், அவ்வொலி வந்த விடத்தைக் குறித்துச் சென்றான்; பிறகு நீர் நொச்சில் மிகுந்த விடத்தில் தனது கணை தைத்து வருந்துகின்றவனும் குடத்தோடு கூடினவனுமான முனி புத்திரனைக் கண்டு, தானும் வருக்கத்தினால் உள்ளே சல்லியத்தினால் தைக்கப்பட்டவன்போல வருந்தினன். நற்குடியில் பிறந்த தசரதன், குதிரையினின்றும் இறங்கி, குடத்தில் சாய்ந்திருக்கும் முனி குமாரனைப் பார்த்து (பிரம்மஹத்தி வருமென்ற சங்கையினால்) "உமது வம்சம்யாதே"ன்று வினவினான்; அதற்கு அவன் தழுதழுத்த குரலில் தான் பிராமணனல்லனென்று தெரிவித்தனன்.

பின்பு அரசன், அம்முனிகுமாரனுடைய ஏவுதலின் பேரில் உடலில்தைத்த அம்பைப் பிடுங்காமலே அவனை குருடர்களான

அவன் பெற்றோர் சமீபத்தில் கொண்டுபோய் விட்டனன்; பிறகு வேந்தன், "முனிபுத்திரன் நீர் மொள்ளுகின்ற சப்தத்தால் நான் யானையென்று நினைத்து அடித்துவிட்டேன்" என்று தான் செய்தபிழையை அவன் பெற்றோரிடம் சொன்னான். பின்னர் அத்தம்பதிகள் வெகுநேரம் பிரலாபித்து, அரசனைப் புதல்வன் மார்பினில் தைத்திருக்கும் அம்பைப் பிடுங்கும்படி சொல்லினர்; அரசனும் கணையைப் பிடுங்கியவுடனே அக்குழந்தை இறந்தனன்; பிறகு அம்முனி, கையில் நிறைந்த கண்ணீராலேயே தசரதனைப் பார்த்து "ஹே அரசனே! நீயும் முதியவயதில் என்னைப்போலப் புத்திரசோகத்தினால் மரணமடைவாய்" என்று சபித்தார். பிறகு முன்பு காலால் மிதித்தமையால் விஷத்தைக் கக்கிய பாம்பைப் போன்ற முனியைப் பார்த்து, முதலில் பிழைசெய்த கோசலாதிபதி சொல்லலானான்:—

"பகவானாகிய நீர், புதல்வன் முககமலத்தின் சோபையைக் காணாத என்னைப்பார்த்து, 'புத்திரசோகத்தினால் இறப்பாய்' என்று சபித்ததும் பாக்கியமேயாகும். விறகுகளால் ஜ்வலிக்கும் தீயானது, பயிர்செய்யக்கூடிய பூமியைத் தகித்தாலும் முளைகிளம்பும் சக்தியையும் உண்டுபண்ணுகின்றது; அருளற்றவனும் கொல்லத்தக்கவனுமான நான் இனி என்ன செய்யவேண்டும்?" என்று வினவினான்; அதற்கு அம்முனிவர் மனைவியோடு புத்திரனைப் பின் தொடருவதற்கு விருப்பமுள்ளவராய், விறகுகளையும் நெருப்பையும் கொணர்ந்து கொடுக்கும்படி அரசனை வேண்டிக் கொண்டனர்.

உடனே தசரதன், தனது பரிவாரங்களோடு சேர்ந்து, முனிவரின் விருப்பத்தை நிறைவேற்றிவிட்டு, தான் செய்த தீவினையினால் உற்சாகமற்றவனாயினன்; வடவாமுகாக்கினியைத் தரிக்கும் சமுத்ரம்போல, அவ்வேந்தன், உள்ளே இருப்பைப்பெற்றதும், தனது நாசத்திற்குக் காரணமுமான சாபத்தைத் தரித்தவனாய் வனத்தினின்றும் திரும்பினான்.

(ஒன்பதாவது ஸர்க்கம் முடிந்தது.)

* * *

By: M. M. Narayanasawmy Aiyer,
Mudikondan, P. O.
(*via*) *Nannilam.*

[illegible]

[illegible]

ப்ரஸ்னேத்தர மாணிக்யமாலா.

(முன் தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை-1, பக்கம்-24)

[illegible]வகாகளுடைய க்ரியை.

21. [illegible]

யேநித்யம் வ்ரததர்ம சம்யமபராஹு சம்யக்த்வ சந்தாரிண
ஸ்தத்வாதத்வவி தோதயார சயுதாஹா சர்வஞ்பூஜாபராஹா
யேசத்பாத்ர விதானதான நிபுணாத்னத் யாலங்க்ருதா
ஸ்தேயாந்திக்ரமச: சுரேந்த்ரபவனம் ஜைநாகமோபர சகா:

(இ-ள்) ஜைனர்கள் நித்யம் வ்ரத தர்மங்களிலும், இந்திரிய நிக்ரகங்களிலும் தத்பரர்களாகி, சம்யக்த்வத்தை வகித்து தத்வம் எது அதத்வம் எது என்பதை நன்றாய் அறிந்து தயாபரிதர்களாகி, சர்வக்ஞான வீதராகனுக்கு பூஜையைச் செய்து சத்பாத்ரதான சூரராய் ரத்னத்ரய (சம்யக்தர்சன, சம்யக்ஞான, சம்யக்சாரித்ர)த்தினலே பூஷிதர்களானல் அவர்கள் க்ரமேண மோக்ஷத்தை அடைகின்றார்கள்.

22. [illegible]

குணவயத வசமபடிமாதானம் ஜலகாலணம்ச அணத்தமிணம்
தம்சணணா சரித்தம் கிரியா தேவண்ணசாவ யாபணிபா

(இ-ள்.) மூலகுணம் 8, வ்ரதம் 12, சமதாபாவம் 1, ப்ரதிமா 11, தானம் 4, ஜலசுத்தி 1, ராத்ரி போஜனத்யாகம் 1, தர்சனம் 1, ஞானம் 1, சாரித்ரம் 1 ஆகிய 53ம் ச்ராவகர்களுடைய க்ரியைகள்.

[illegible] ?

எட்டுமூல குணங்களேவைகள்?

23. [illegible]

மத்யமாம்ச மதுத்யாஹு: சமோதும்பர பஞ்சகை
அஷ்டௌமூலகுணா நாஹுர்க்ரஹிணாம் ச்ரமணோத் மாஹா

(இ-ள்.) மத்யம், மாம்சம், தேன், இவைகளையும், அத்திக்காய், ஆல், அரசு, கல்லால், கல்லத்தி, என்கிற ஐந்துவித பலங்களையும், விடுவதையே ஆசார்யர்கள், க்ரகஸ்தர்களுடைய எட்டுமூல குணங்களென்பார்கள்.

𑌏𑌕𑌾𑌦𑌶 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌃 𑌕𑌾𑌃?

ப்ரதிமைகள் எவைகள்?

24 𑌦𑌂𑌸𑌣𑌵𑌯 𑌸𑌾𑌮𑌾𑌇𑌯 𑌪𑍋𑌸𑌹 𑌸𑌚𑌿𑌤𑍍𑌤 𑌰𑌾𑌯𑌭𑌤𑍍𑌤𑍀𑌯
𑌬𑌂𑌭𑌾𑌰𑌂𑌭 𑌪𑌰𑌿𑌗𑍍𑌗𑌹 𑌅𑌣𑌮𑌣𑍁𑌦𑍍𑌦𑌿𑌟𑍍𑌠 𑌦𑍇𑌸𑌵𑌿𑌰𑌦𑍇𑌦𑍇

தம்சணவத சாமாயிய போகஹசசித்தரா இபுக்திய
பம்ஹாரம்ப பரிக்கக அணுமணுத் திட்டதே சவிரதேதே

(இ-ள்.) தர்சனிக, வ்ரதிக, சாமாயிக, ப்ரோஷத தோபவாச, சசித்த த்யாக, ராத்ரி போஜனத்யாக, ப்ரம்மசர்ய, ஆரம்ப, த்யாக, பரிக்ரகத்யாக, அனுமதித் யாக, உத்திஷ்டத்யாக என்னும் இந்த 11ம் ச்ராவக ப்ரதிமைகள் (நிலைகள்). இவைகளில் எதாவதொரு நிலையிலே இருப்பவனுக்கே ச்ராவகனென்று பெயர். மேல் சொன்ன 11 ப்ரதிமைகள், 14 குணஸ்தானங்களில், தேசவிரத னென்கிற 5-வது குணஸ்தானத்துக்கு இப்படியாக இருக்கின்றன.

𑌅𑌣𑍁𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌿 𑌕𑌾𑌨𑌿?

அணுவ்ரதங்களின் பெயரென்ன?

25. 𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌸𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌃
𑌅𑌣𑍁𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌿 𑌸𑌾𑌰𑌾𑌣𑌿 𑌪𑌂𑌚𑍈𑌵 𑌗𑍃𑌹𑌿𑌣𑌾𑌂 𑌸𑌦𑌾

அஹிம்சாசூன்ரதாஸ் தேயப்ரம்மசர்யா பரிக்ரகாஹா
அணுவ்ரதானி சாராணிபஞ்சைவ க்ரகிணும் கஜு.

(இ-ள்.) ஜீவஹிம்சை செய்யாமலிருப்பது, பொய் சொல்லாமை, களவாடாமை, ப்ரம்மசர்யம், தனதான்யங்களுடைய சேர்க்கையில் அளவறுத்துக் கொள்வது ஆகிய இந்த 5-ம் அணுவ்ரதங்களாம். இவற்றை க்ரகஸ்தர்கள் பாலிக்கவேண்டும்.

𑌗𑍁𑌣𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌿 𑌶𑌿𑌕𑍍𑌷𑌾𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌿𑌚 𑌕𑌾𑌨𑌿?

குணங்கள் எவை? சிக்ஷாவ்ரதங்க ளெவை?

26. 𑌦𑌿𑌗𑍍𑌦𑍇𑌶𑌾 𑌨𑌰𑍍𑌥𑌦𑌂𑌡 𑌸𑌾𑌮𑌾𑌯𑌿𑌕𑌂 𑌪𑍍𑌰𑍋𑌷𑌧𑌂
𑌭𑍋𑌗𑍋𑌪𑌭𑍋𑌗 𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌨𑌮𑌤𑌿𑌥𑌿 𑌦𑌾𑌨𑌂

திக்தேசாநர்த்த தண்டசசாமாயிகம் சப்ரோஷதம்
போகோப போகசங் க்யானமதி திர் தானமுத்தமம்.

(இ-ள்.) எதாவதொரு திக்கில் போவதில்லை என்றும், போனாலும் இவ்வளவு தூரம்வரையில் போவேனென்றும் வைத்துக்கொள்கிற நியமம், திக்வ்ரதம். எதாவதொரு தேசத்தில் இவ்வளவு யோஜனைபர்யந்தம் போவேன், அதற்கப்புறம் போவதில்லை என்று ப்ரதிக்ஞை செய்து கொள்வது. தேசவ்ரதம், விசேஷ காரணமில்லாமல் வனஸ்பதி முதலானவைகளை வெட்டாமலிருப்பது அனர்த்த தண்டத்யாகம். இவை மூன்றும் குணவ்ரதங்கள். சாமாயிகம் செய்வது, ப்ரோஷ தோபவாசம் செய்வது போகோபபோக நியமங்களைச் செய்வது அதிதிக்குதானம் செய்வது ஆகிய இந்த 4-ம் சிக்ஷாவ்ரதங்கள்.

𑌸𑌾𑌮𑌾𑌯𑌿𑌕𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌕𑌿𑌂 ?

சாமாயிகத்தினுடைய லக்ஷணமென்ன?

27. 𑌸𑌮𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌸𑌂𑌯𑌮𑌃 𑌶𑍁𑌭𑌭𑌾𑌵𑌨𑌾
𑌆𑌰𑍍𑌤𑌰𑍌𑌦𑍍𑌰𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌤𑌦𑍍𑌧𑌿 𑌸𑌾𑌮𑌾𑌯𑌿𑌕𑌂 𑌵𑍍𑌰𑌤𑌂
சமதாசர்வபூதேஷு சம்யம சுபபாவநா
ஆர்த்தரௌத்ர பரித்யாக ஸ்தத்தி சாமாயிகம்வ்ரதம்.

(இ-ள்.) எல்லா ப்ராணிகளிடத்திலும் சமதாபாவத்தைத் தரித்து, தபச்சரணத்தில் சுபமான பாவனையை இட்டு, ஆர்த்த, ரௌத்ர, த்யானத்தைவிட்டுவிடவேண்டும். இதற்கே சாமாயிகவ்ரதமென்று பெயர்.

𑌪𑍍𑌰𑍋𑌷𑌧𑌸𑍍𑌯 𑌕𑌿𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 ?

ப்ரோஷதத்தினுடைய லக்ஷண மென்ன?

28. 𑌪𑌰𑍍𑌵𑌦𑌿𑌨𑍇𑌷𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌷𑍍𑌵𑌪𑌿 𑌮𑌾𑌸𑍇 𑌮𑌾𑌸𑍇 𑌸𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌨𑌿𑌗𑍂𑌹𑍍𑌯
𑌪𑍍𑌰𑍋𑌷𑌧𑌨𑌿𑌯𑌮𑌵𑌿𑌧𑌾𑌯𑍀 𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌿𑌪𑌰𑌃 𑌪𑍍𑌰𑍋𑌷𑌧𑌾𑌨𑌶𑌨𑌃
பர்வதினேஷு சதுர்ஷ்வபிமா சேமா சேஸ்வசக்தி முனிகுஹ்ய
ப்ரோஷதநியம விதாயிப்ராணிதி பரப்ரோஷதா நசநஹா.

(இ-ள்.) அஷ்டமி, சதுர்த்தசி, என்கிற ப்ரதி ஒருமாதத்தினுடைய பர்வதிதிகளில் தன்னுடைய சக்தியை அனுசரித்து நியமத்தினின்றும் ப்ரோஷதோபவாசத்தைச்செய்து சுபத்யானத்தில் தத்பரனாயிருப்பது நாலாவது ப்ரோஷதோபவாச ப்ரதிமாதாரி என்று சொல்லப்படும்.

(இன்னும் வரும்.)

விருதூர். திரு. அப்பாண்டை நயினார்.
அனந்தபுரம் ஸ்கூல் டீச்சர்,
ஜாகீர், ஆரணி.

கூட்டுறவாளர்க்கேற்ற சில துறை.

(கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர்)

(முன்தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை-2, பக்கம்-31)

கொடுக்கல் வாங்கல்.

இத்தகைப் பெரும்பயன் தரும் நன்முறையைக் கைக்கொண்டு இன்புறுதற்கு முதற் பகைமையாவது "அங்கத்தினர்களிடம் முன் பணம் கொடுத்து வாங்குதற்குத் தக்க பொருள் வசதி இல்லாமையே" என்பது முன்னர்க் கூறப்பட்டது. அஃது உட்பகையாம் என்பதும் அறிந்ததே. இத்தகைய பகைமைக்குத் தப்பவேண்டியது இன்றியமையாத தொன்றே. இத்தொல்லையினின்றும் நீங்கும்பொருட்டுத் தான் 'கொடுக்கல் வாங்கல் சங்கங்கள்' நிலைபிடப்படுகின்றன. இந்தக் கொடுக்கல் வாங்கல் சங்கங்களின் தந்தை எனத்தகும் ரைபீஸன் துரைமகனார் செய்ததும் இம்முறை தான். அவர் கண்ட முறையையும், அம்முறையிற் சிறிது மாறுதலுடன் நடைபெறும் ஷூல்ஸ் டெலிட்ஸ் என்பார் கண்ட முறையையும் பின்பற்றித் தான் நமது நாட்டிற் கிராமச் சங்கங்களும், நகரச் சங்கங்களும் நடைபெறுவதாகச் சொல்லப்படுகின்றன. ஆனால், நமது நாட்டு நடைமுறை அடிப்படையான தத்துவங்களிலேயே பெரிதும் மாறுதல் அடைந்திருக்கின்றது கவனிக்கப்படவில்லை.

அங்கே இத்தகைய சங்கங்கள் "மிகுத்து வைக்கவும், கடன் கொடுக்கவும் உள்ள சங்கங்கள்" என்ற பெயருடன் பெயருக்கேற்ப அடிப்படையான தத்துவங்களில் தவறாது நடைபெறுகின்றன. இங்கே "கடன் கொடுக்கும் சங்கங்கள்" என்ற பெயருடன் அப்பெயருக்கேற்பவே நடைபெற்று வருகின்றன. அங்கே ஒவ்வொரு அங்கத்தினர் பேரிலும் 'எவ்வளவு மிகுத்து வைக்கப்பட்டிருக்கின்றது' என்று கவனித்து அதற்குத் தக்கவாறு தேவையானவற்றிற்கு மாத்திரம் கடனாக அளிக்கப்படுகிறது. இங்கே 'குறிப்பிட்டுச் சொல்ல மனம் வாராத' முறைமையில் பெரும்பாலான கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அங்கே "சென்ற வருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷத்தில் இவ்வளவு அங்கத்தினர் பேரால் இவ்வளவு தொகை அதிகம் மிகுதியாக ஏற்பட்டிருக்கிறது" என்ற அறிக்கை விசேஷமாகக் கருதப்படுகின்றது. இங்கே "சென்ற வருஷத்தைக் காட்டி

னும் இந்த வருஷம் இவ்வளவு அங்கத்தினர்களுக்கு இவ்வளவு தொகை அதிகமாக மத்திய சங்கத்திலிருந்து கடன் வாங்கிக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்ற அறிக்கை விசேஷமாகக் கருதப் படுகின்றது. அங்கே ஒரு பைசா முதல் மிகுத்துதவுவதற்கு வேண் டிய வசதிகள் மூலாதாரச் சங்கங்களுக்கு இருக்கின்றன. இங்கே மூலாதாரச் சங்கங்களுக்கு அத்தகைய வசதிகள் தாராளமாய் உப யோகப்படுத்தக் கூடிய நிலைமையில் இல்லை.

சில இடங்களில் அங்கத்தினர்களுக்கு உபகாரமா யிருக்கும் பொருட்டுப் பின்னுதவிச் சேமநிதி ஒன்று சேர்க்கத் தொடங்கினல் அம்முறை மத்திய சங்கங்களாற் செய்யப்படுகின்றது. இது "மரு மகளோடு இன்புற்று மகிழ்ந்திருக்கும் மகளது நிலைமையைக் கண்டு பொறுமைப்பட்டுப் போட்டிபோடும் தாயின் செயலுக்கு ஒப்பா னது" என்று அறிவுடையோராற் கருதப்படும் என்பது பிழையா குமா? எந்த நன்மையும் ஏழை மக்களிடமிருந்தே தொடங்கப்பட வேண்டியது நியாயமும், பெரியோர்களது கடமையுமாதலின் பிழை யாகாதென்க.

இக்கூறியவற்றால், நமது நாட்டிலே முதலிற் கிராமந்தோறும் "மிகுத்து வைக்கவும், கடன் கொடுக்கவும்" என்ற தலைப்பெயரு டன் சங்கங்கள் தோன்றவேண்டும் என்பதும், அவற்றில் பெயருக் கேற்ப நடபடிக்கைகள் நடந்துவரல் வேண்டும் என்பதும், அவற் றின் நடபடிக்கைகளுக்குத் துணைசெய்வதற்கென்று மத்திய சங் கங்கள் முன் வரவேண்டுமே அன்றிப் போட்டிபோடும் பொருட்டு முன் வரலாகாது என்பதும் இனிது புலனும்.

இங்ஙனம் நடைபெறில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவர்க்கும் தத்தம் பொருளாதார நிலைமை நன்கு விளங்கும். விளங்கவே, அன்னர் வரவுக்குமிஞ்சிச் செலவுசெய்ய இடமுண்டாகாது. வேண் டியபொழுதெல்லாம் கடன்வாங்க வசதியிருப்பின் எத்தகைய அறி ஞரும் பிரியப்படி செலவிடும்பொருட்டுக் கடன் வாங்கவே முந்து வர். யாரேனும் "இங்ஙனம் செய்வது தகாததாயிற்றே" என்று கூறித்தடுத்தால் அன்னர் உடனே, "கடனுண்டு வாழாமைகாண்ட லினிதே" "கடன் கொண்டவன் கால்மனிதன்" "கடன் காலனுக் குச் சமம்" என்றெல்லாம் தம்மாற் கூறக்கூடிய—'கடன்படல் கூடாது' என்ற கருத்தை வற்புறுத்தக்கூடிய ஆப்த வாக்கியங்கள் அனைத்தையும் மறந்து "கடன்கொண்டும் செய்வனசெய்" என்ற ஆபத் காலவாக்கியத்தைக்கூறித் தமது பொருந்தாச் செயலுக்கு

மேற்கோள் காட்டவும் முந்துவர். இஃதுலக அனுபவம். "வளவனாயினும் அளவறிந்தழித்துண்" என்ற ஒளவையார் வாக்கும் ஆராயத்தக்கது.

அன்றியும், வரவு செலவுகளை முற்கூட்டி அறிந்து வைத்தோர், அளவுக்குமிஞ்சிச் செலவு செய்வதால் வருமானம் அழிதல், மதிகெடல், போனதிசை எல்லார்க்கும் கள்ளராதல், எழ்பிறப்பும் தீயராதல், நல்லார்க்கும் பொல்லாராதல் ஆகிய தொல்லைகளுக்குள்ளாகார். மேலும், எதற்கும் கலங்காதவனும், கைலாய மலையையே கலங்கச்செய்தவனும் ஆகிய இலங்கேசன் இராமபாணத்தால் யுத்தகளத்திற் கலங்கியதற்கு உவமையாகக் கவிவல்லோராற் கூறப்படுங் கடன் தொல்லைக்கும் அன்னார் உள்ளாகமாட்டார். தகுந்த நிலைமையிருந்தும் கடன்வாய்ப்பட்டுப் பிறருக்கு அடிமையாகும் துக்கத்தைக்காட்டிலும் கொடியதொரு துக்கம் பிறிதொன்றில்லை என்பதை அடியேன் எடுத்துக்கூற வேண்டியதில்லை. இன்னும் இம்முறை வளரவளர நம்மவர்க்குள் வேண்டாத—வெறுக்கத்தக்க—ஆடம்பரமான அழிசெலவுகளும், தண்டச்செலவுகளும் குறைந்து பொருள் மிகுதற்குற்ற வசதி உண்டாகும் என்பதும் ஆராயத்தக்கதாம்.

இத்துணையுங் கூறியவாற்றால் நமது நாட்டில் நடைபெறும் கொடுக்கல் வாங்கல் சங்கங்கள் "பொது ஜனங்களுக்குச் சிக்கன வாழ்க்கையின் உயர்வையும், வட்டித்தொல்லையால் வரும் இழிவையும் விரித்துரைக்க வேண்டியது தங்கள் கடமை" என்பதை உணர்ந்து, தற்கால நடை முறையிற் சிறிதுமாறித் தம்மைச்சேர்ந்த அங்கத்தினர்களது வறுமைத் தொல்லையை நீக்கிச் செல்வ நிலைமையை வளர்த்துச் சேர்ந்து தொழில்செய்யத்தக்க வகையில் இனிது நடைபெறுவதே நாட்டிற்கு நலம் தருவதாம் என்பது ஒரு சிறிது விளங்கும்.

இத்துணையுங் கூறியவாற்றால் நமது நாட்டில் நடைபெறும் கொடுக்கல் வாங்கல் சங்கங்கள் "பொது ஜனங்களுக்குச் சிக்கன வாழ்க்கையின் உயர்வையும், வட்டித்தொல்லையால் வரும் இழிவையும் விரித்துரைக்க வேண்டியது தங்கள் கடமை" என்பதை உணர்ந்து, தற்கால நடை முறையிற் சிறிது மாறித் தம்மைச்சேர்ந்த அங்கத்தினர்களது வறுமைத் தொல்லையை நீக்கிச் செல்வ நிலைமையை வளர்த்துச சேர்ந்து தொழில்செய்யத்தக்க வகையில் இனிது நடை

பெறுவதே நாட்டிற்கு நலம் தருவதாம் என்பது ஒரு சிறிது விளங்கும்.

வீடமைத்துதவல்.

இங்ஙனம் உண்டு, உடுத்து, உயிர் வாழலுற்ற மக்களாவார்க்கு அடுத்தபடியாக வேண்டியது உறைவதற்குத் தக்க வீட்டுவசதி இருக்க வேண்டியதே. இது பெரிதும் நியாயமானது என்பது எவர்க்கும் ஒப்பமுடிந்ததுமாம். ஒரு பெரியவர் "மக்களாவார்க்குச் சுபகாரியங்களுக்கு வீட்டுவசதி வேண்டியது அத்துணை ஆவசியமன்று; இறத்தற்குத் தவறாது சொந்தவீடு இருந்தே தீரவேண்டும்." என்று கூறியுள்ளது எவ்வளவு ஆழ்ந்த கருத்தைத் தெரிவிக்கின்றது என்பது ஆராயத் தக்கது. இத்தகைய இன்றியமையாத வீட்டு வசதியைப் பெற்றிராதவர் நமது நாட்டிலே பலர் கோடிக்கணக்கில் இன்னும் இருக்கின்றனர். ஒவ்வொருவர்க்கும் சொந்தவீடு இருந்தே ஆகவேண்டும் என்பது ஒத்துக்கொள்ளப்பட்டதாதலின் தம்மைச்சேர்ந்தும் வீட்டு வசதியைப் பெற்றிராத ஒவ்வொருவர்க்கும் அந்த வசதியைத் தேடிக்கொடுக்க முயலவேண்டியது சமநோக்கினைக் கடைப்பிடித் தொழுகவேண்டிய கடமை பூண்ட கூட்டுறவாளர் ஒவ்வொருவரது தவறாக் கடமையாம்.

இதன்பொருட்டு ஒவ்வொருவரும் தனித்தனி முயலுவதிலும் பலரும் ஒன்றுசேர்ந்து முயலுவது நலம் தருவதொன்றாம். அங்ஙனம் முயன்று நீண்ட காலத்திற்குக் குறைந்த வட்டிக்கு அங்கத்தினர்களுக்குப் பொருள் கிடைக்கும்படியான வசதிகளை உண்டு பண்ணிக்கொள்ளல் வேண்டும். நமது நாட்டிலுள்ள நிதிகள், கூட்டுச்சீட்டு முறைகள் முதலியன இந்த வசதிக்குத் தக்க துணைசெய்யக்கூடியன என்பது பலரது கருத்தாம். நமது நாட்டில் கூட்டுறவு முறையை உற்பத்தி செய்வதற்காகப் பாடுபட்டவர் எனக் கருதப்படும் நெக்கில்ஸன் துரைமகனார் கருத்தும் இதுவே. இவர், இந்த நிதிகள் முதலியவற்றை மேல் நாடுகளிலுள்ள கட்டடச் சங்கங்களுக்கு ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார். 'இந்தியாவில் இந்தியர்களால் மிக உயர்வாக நடத்தப்படும் மூன்று முக்கியமான ஸ்தாபனங்களுள் ஒன்று' என்று வேற்று நாட்டினராலும் புகழ்ந்து கூறப்பட்ட பெருமைவாய்ந்த மயிலாப்பூர் நிதியின் துணைக்கொண்டு சென்னையிலும், பிற இடங்களிலும் பலர் வீட்டு வசதியைப் பெற்றுள்ளார் என்பது அநுபவத்திற்கண்டது.

210459

இங்ஙனமே, நமது மாகாணத்திலுள்ள பல பட்டணங்களிலும் "பாதிக்காய் கறிக்கு; பாதிக்காய் விதைக்கு" என்பதுபோல நீண்ட காலக்கடனும், குறைந்த காலக்கடனுமாகச் சேர்த்துக் கொடுத்து வரும் முறைமையும்; "நோய்கொண்ட உடலில் ஒரு பாதியைக் குணப்படுத்தி மற்ற ஒரு பாதியை நோயுடன் விட்டுவைப்பது" என்பதுபோலப் பாதிக்கடனைக் குறைந்த வட்டிக்கும், பாதிக்கடனை அதிக வட்டிக்கும் கொடுத்துவரும் முறைமையும்; "நாங்கள் ஆதியிற்கொண்ட கொள்கையில் மாறமாட்டோம்" என்று கூறிக்கொண்டு முன்னேற முயலாதிருக்கும் முறைமையும் நீக்கி ஏழுவருஷம், பத்துவருஷம் ஆகிய நீண்ட காலகெடுவுக்குக் கடன் கிடைக்கத் தக்க வசதிகள் ஏற்படல்வேண்டும். இம்முறையும் முற்றும் கூட்டுறவாளராற் கைக்கொள்ளப்பட்டுக் கூட்டுறவு முறையிலேயே நடைபெறுவதுதான் பெரிதும் விரும்பத்தக்கது. மேல் நாடுகளில் இருபது வருஷக் கெடுக்களையுடைய கடன்களும் கொடுக்கப்படுகின்றன என அறிகிறோம். "மனம் இருந்தால் வழிபிறக்கும்" என்பதுபோல் சிறிது முயன்றால் இம்முறை நமது நாட்டில் விரைவிற் பரவிப் பெரிதும் பயன்தந்து உதவும் என்பதற்கு அடியேன் அதிகம் உதாரணங்களை எடுத்துக் கூறவேண்டியதில்லை. வேண்டுவது மனமே.

தொடரும்.

செய்ந்நன்றியறிதல்.

மானிடராகிய நாம் ஒருவர்செய்த உபகாரத்தை மறக்காது அவர்க்கு வந்தனமளித்து வாழ்கலே மேலாகும். செய்ந்நன்றியை மறவாதிருத்தலே சிறந்த புண்ணியமுமாம். இதனால் நாம் ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவின்றி ஒத்துவாழலாம். இது மனிதருக்கு இருக்கவேண்டிய முக்கிய குணங்களில் ஒன்றாகும். கைம்மாறு கருதாமல் உதவிசெய்வதைக் காட்டிலுஞ் சிறந்தது வேறொன்றில்லை. இதை நோக்கியே பொய்யாமொழியார்,

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது." என்று கூறினார்.

நமது கஷ்டகாலத்தில் ஒருவன் நமக்கு அற்பவுதவி செய்தபோதினும், அதைமேலானதாக நினைத்தல்வேண்டும். அவர் நட்பை மறவாதிருப்பவர் எழ்பிறப்பிலும் நல்லவராவர். இவை பற்றிச் செந்நாப்புலவர்,

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது."

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரிவார்"

"எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கள்
விழுமந் துடைத்தவர் நட்பு."

என்று கூறியவை கவனிக்கற்பாலனவாம்.

ஒருவர் செய்த நன்றியை மறப்பதைக் காட்டிலும் கொடியது வேறொன்றில்லை. ஒருவன்செய்த தீமையை அக்கணத்தில் மறந்து விடவேண்டும். ஆனால், நன்றியை அவ்வாறு மறப்பது நல்லதல்ல. பெரியோர்கள் கொடுத்தவரத்தைக் கெடுத்தாலும் அப்பாபத்தினின்றும் நீங்கும் வழியுண்டு; ஆனால், ஒருவன் செய்த நன்றியை மறப்பின் அப்பாபத்தினின்றும் நீங்கும் வழியே கிடையாது.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்றார் திருக்குறளாசிரியரும். நன்றிமறவாமையைப் பற்றி ஒரு கதை யுண்டு:—"ஒருநாள் ஒரு அரசன் தன் அமைச்சரோடு வேட்டைக்குச் சென்று திரும்பிவரும் வழியில், ஓர் வயோதிகர் மாங்கொட்டை ஒன்றை நட்டு ஜலம்விட்டுக் கொண்டிருந்தார். அவரைக் கண்டு அரசன் சிரித்து 'ஏ! முதியவரே! இந்த மாங்கொட்டையை நட்டு ஜலம் விடுகிறீரே; அம்மரம் உமது வாழ் நாட்களுக்குள் பலன் கொடுக்குமா?' என்றான். அதற்கு முதியவர், 'அரசே! அது பலங் கொடுக்காது என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் பிறர் நட்ட மரங்களின் பலனை இதுவரையிலும், அனுபவித்தேன். அதனால் எனக்குப் பிறகு வருபவர்களுக்கு இது உபயோகமாகும் வண்ணம் நான் இதை நடுகின்றேன்' என்றார். இதைக் கேட்டு அரசன் முதிர்ந்தவரிடத்து மகிழ்வெய்தி அவருக்குப் பத்து ரூபாய் கொடுத்துப் போனான். வயோதிகரும் சந்தோஷ மடைந்தார். அந்தோ! செய்ந்நன்றியை மறக்கும் நண்பர்கள் இக்கதையையாவது கவனிக்கவேண்டும்.

பிரதி உபகாரத்தை நாடி உதவி செய்யலாகாது. ஒருவர்க்கு உபகாரஞ் செய்தால் அவர்கள் மறுபடி என்று நமக்கு உதவி செய்வார்கள் என்று எதிர் நோக்கலாகாது.

"நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்"

"கைம்மாறு நாடாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர்"

"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்"

"சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடின்
பலாமாவைப் பாதிரியைப் பார்"

இவற்றை உய்த்துணர்க.

மாதா, பிதா, குரு, தெய்வம் அரசன் ஆகிய இவ்வைவருக்கும் நன்றி பாராட்ட நாம் கடமைப் பட்டிருக்கின்றோம்.

தாய் தந்தை:—தாய் நம்மைப் பத்துமாதஞ் சுமந்து, வருந்திப் பெற்று, ஈ எறும்பு கடிக்காமல் பார்த்துப் பாலூட்டி வளர்த்து வருகிறாள். தகப்பன் நமக்கு ஆகாரம் உடைகொடுத்து, கல்வி கற்பித்து, மேல் பதவிக்குக்கொண்டு வருகின்றார். ஆதலால் இவர்க்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். இதனாலல்லவோ ஆன்றோர், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கூறினர்.

குரு:—இவர் அஞ்ஞானத்தைப் போக்கி, ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்கின்றார். அதனால் இவர்க்கும் நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். இங்கு எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்னும் முதுமொழி ஆராயத்தக்கது.

தெய்வம்:—இவர் நம்மிடத்துக் கைம்மாறு கருதாமல் நமக்கு எண்ணிறந்த உதவிசெய்தார், செய்கிறார், செய்வார். ஆதலால் இவர்க்கும் நன்றிபாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். "தெய்வமிகழேல்" என்று மேலோர் கூறியது இங்குக் கவனிக்கத் தக்கது.

அரசன்:—இவர் நமக்கு பள்ளிகள் ஆஸ்பத்திரிகள், முதலிய வைகள் ஏற்படுத்தியும், நமக்குற்ற துன்பங்களைத் தமக்கு வந்தது போல் எண்ணி அவற்றிற்குத் தக்க பரிகாரம் செய்தும், நீதி பிறழாது அரசிபற்றி வருவதினால் இவர்க்கும் நாம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். "சக்கர நெறிநில்" என்ற பெரியார் கூற்று இங்கு கருதத்தக்கது.

ஆதலால் நாம் பிறர்செய்த நன்றியை மறவாது அவர்க்கு உதவிசெய்து, பெரியார் கூறிய சன்மார்க்கங்களைக் கைக்கொண்டு, அதன்படி நடந்து இன்புறுவோமாக! சுபம்.

(தொடரும்)

எஸ். என். இராமு,

கூறைநாடு.

செய்யுட் கதைகள்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை--3, பக்கம்-55.)

அறஞ்செய விரும்பு.

"இந்த வகுப்பில் வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள், நன்றாகப் படித்து, நல்லவன் என்று பெயர் எடுத்தால்தானே மேல் வகுப்புக்குப் போவீர்கள். அதேமாதிரி, ஒவ்வொரு பிறப்பிலும் நல்ல நல்ல பெயர் எடுத்தே நாம் இப்பிறப்பை அடைந்துளோம். இம் மேலான பிறப்பை அடைய, எவ்வளவு வருஷங்கள், எவ்வளவு சிரமங்கள் அடைந்திருப்போம்! இவ்வளவு அருமையான, நம் மானிடப்பிறப்பை வியர்த்தம் ஆக்கிக்கொள்ளலாமா? கூடாது! கூடாது!! ஆகையினால், நாம் என்ன செய்யவேண்டும் தெரியுமா? சொல்லுகிறேன் கேளுங்கள்:

"இவ்வேழு பிறப்புக்களுக்கும் அதிபதியான கடவுள், நீங்கள் நினைப்பதைப்போலச் சாமான்யமானவர் அல்ல. அவர், நம்மையேயன்றி இவ்வுலகத்தையுமே ஆக்கவும் அழிக்கவும் வல்லவர். இப்பிறப்பில், நாம், 'நல்லவன்' என்றும், 'தர்மவான்' என்றும், அழியாப்பெயர் பெற்றால், அவர் நம்மேல் இரக்கங்கொண்டு எளிதில் ஏழாவது வகுப்பைப் பெறுமாறு செய்குவர். இல்லாவிடில், நம் மேல் கோபங்கொண்டு, இதற்கும் கீழ்வகுப்புக்களில் நம்மை நெட்டித் தள்ளி விடுகிறார்.

"ஆகையினால், அவர் அருள்பெற்று அழியாப்புகழ்பெற முன் வாருங்கள்! அதற்குக் காரணமான அறம்செய்ய விரும்புங்கள். நாம் அறம் இயற்றினால், நமக்து ஆரன் அருள்புரிவார். மேலும், தர்மம்செய்தால் நமக்கு இன்பமும், அதர்மம் செய்தால் துன்பமும் கிட்டும்.

"ஆகையினால், குழந்தைகளே! நீங்கள் அறஞ்செயவிரும்புங்கள்! அவ்வறத்தை, எப்பொழுது உங்களுக்குச் சமயம் வாய்க்கின்றதோ அப்பொழுதுதானே செய்துவிடுங்கள். ஏனெனில், சமயம் வாய்க்கும்போதே செய்யாவிட்டால் பின்னால் அந்தச் சமயம் நமக்கு வாய்ப்பதரிது.

"அப்படி நாம் செய்யும் அறம் பெரியதாக இருக்கவேண்டுமென்பதில்லை உங்களுடைய சிநேகிதர் ஒருநாள் எழுத்தாணி கொண்டுவர மறந்துபோனதாக வைத்துக் கொள்வோம். அவருக்கு உன்னுடைய எழுது கோலைக்கொடுத்து உதவுவதாக வைத்துக்கொள்வோம், அதுவும் ஒரு அறமேயாகும்.

"இப்படி நீங்கள் செய்யும் தர்மங்கள்-சிறியனவாயினும் சரி-பெரியனவாயினும் சரி-பிறர் அறியும் வண்ணம் செய்யப்படவேண்டியதில்லை கடவுள், எந்த இடத்திலும் இருந்துகொண்டு, எந்த விஷயங்களையும் பார்த்துக்கொண் டிருக்கிறார். ஆகையினால் இரகஸ்யமாகச் செய்தால் போதுமானது.

"ஆகையினால், குழந்தைகளே! நற்கதியை அடைந்து, புகழ் பெறவேண்டுமாயின், எப்போது சமயம் வாய்க்கின்றதோ-அப்போதே நல்லறத்தைச் செய்யுங்கள். அப்படி உங்களால் செய்யப்பட்ட தர்மங்களைப் புகழ்ச்சியாய்ப் பிறரிடம் சொல்லிக் கொள்ளாதேயுங்கள். அப்படிக் கூறிக்கொள்வது தக்கதன்று;" என்று எல்லாரும் களிப்புறும் வண்ணம் ஒரு சிறு உபந்யாசம் செய்தனர்.

பிறகு, பள்ளிக்கூடத்தை விட்டகன்று, தன்னில்லம் ஏகினார் நமது பாட்டியார்.

(இன்னும் வரும்.)

லால்குடி சே. கந்தசாமி,
தமிழ் ஆசிரியன்,
குடியாத்தம், (வட ஆற்காடு ஜில்லா.)

2-10-59

மலையைவிழுங்கிய

மகாதேவன் கதை.

இது, ஓயாச்சிரிப்பைத்தரும் ஒரு மாயா விநோதக்காரன் கதை. இதில் மகாதேவனென்ற ஜெகஜாலப்புரட்டன், இளமையிலேயே இந்திர ஜாலங்களைச்செய்து ஜனங்களை ஏமாற்றுவது, மலையை விழுங்குகிறேனென்று ஒரு பிரவையும் ஊர் ஜனங்களையும் ஏமாற்றுவது, மாயா முயல்களை வளர்த்து தஞ்சாவூர் எத்தர்களை ஏமாற்றி, அந்த முயலை விலைக்குக் கொடுத்து அவர்களுடைய ஐவேசுகளை யெல்லாம் கைப்பற்றிக் கொள்வது, சாமியார் வேஷம் போட்டு உயிரோடு சமாதியாகி மனிதர்களை ஏமாற்றுவது, தஞ்சாவூர் எத்தர்களின் மூக்கைக் கத்தரித்து அவர்களைச் சொல்லாமலோடும்படி செய்வது, தாசிகளை ஏமாற்றி ரயிலில் சக்கின்கிளாஸ் வண்டியில் பிரயாணஞ்செய்வது ரயிலில் சென்ற நாட்டுப்புரத்தானைச் சக்கின்கிளாஸ் வண்டியில் ஏறச்செய்து போலீஸ் சங்கடத்தில் மாட்டிவைப்பது முதலிய பல விநோத செய்கைகளெல்லாம் அடங்கி யிருக்கின்றன. விலை அணா-6.

விநோதகதைத் திரட்டு.

இது, அடங்காச்சிரிப்பை யுண்டாக்கி, அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் பல கதைத் தொகுதிகள் அடங்கிய புத்தகம். இதில். தமிழ்ப்பாவிருப்பக் கதை, கூட்டத்திற் புகுந்து வாட்டமடைந்தவர் கதை, அதிகப் பேச்சால் அவஸ்தையடைந்த கதை, பேராசை பெருநஷ்டமான கதை, பெருங்குடியர் இருவர் கதை, பெண்பிள்ளை திருடனைப் பிடித்த கதை, கெளிகொடுத்த கதை, செருக்கால் தீங்கடைந்த கதை, திருடர்கள் வித்வானுக்குச் சன்மானஞ் செய்த கதை, விஷபம் தெரியாமல் சண்டையிட்ட கதை, பெருங்காயம் வாங்கிய கதை, சிலேடைப் பேச்சால் அவமானமடைந்தவன் கதை, விநோத சிலேடைக் கதை, பகல் திருடன் கதை, வாக்குச் சாதுரியத்தால் இலாபம்பெற்ற புலவர் கதை, செம்பும் போனதே கோவிந்தா என்ற கதை, சிலேடைப் புலவர் கதை பேர்போன செவிடன் கதை, பஞ்சலக்ஷணக் கதை, ஒரு சிலேடைக்கதை, கொடாக்கண்டன் கதை, விபூதியால் செல்வங்கொடுப்பவன் கதை, கொசுகு சிங்கத்தை வென்ற கதை, தென்னமரத்தில் புல்பிடுங்கின கதை, புலியிடம் வட்டிக் கணக்குத் தீர்க்கப்போன செட்டியார் கதை, தாடிக்குத் தர்க்கம்பேசிய சாமியார் கதை, கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போன கதை, செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறார் என்ற கதை, வேலை கடுமையான வேலை எஜமான் இன்னதென்று தெரியவில்லை என்ற கதை, நன்றியுள்ள எருதின் கதை ஆகிய சுமார் முப்பது கதைகளுக்குமேல் அடங்கி யிருக்கின்றன. சகலரும் வாங்கிப் படிக்கத் தகுந்த அருமை வாய்ந்த புஸ்தகம். விலை அணா 5 தான்.

ஸ்ரீபாலன்.

படிக்கப்படிக்க இனிமையைத் தரும் மகா அற்புதம் வாய்ந்த கற்பனா நாவல். நவரசங்களும் பொருந்தியது. மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுப்பது. விலை அணா 10.

உதயணன்.

இது, மனதைக் கவரத்தக்க மகாமேன்மை தங்கிய தமிழ் நாவல். சிறந்த வித்வானால் எழுதப்பட்டது. பள்ளிக்கூடத்து மாணவர்களும், மற்றவர்களும் விரும்பிப் படிக்கத் தகுந்தது. அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கத் தக்கது. விலை அணா 8.

நரிவிருத்தம் மூலமும் உரையும்.

இந்நூல், சீவகசிந்தாமணியை இயற்றிய ஆசிரியராகிய திருத்தக்க தேவரால் செய்யப்பட்டது. வித்வான்களும் உச்சிமேற் கொள்ளத் தக்கது. விரிந்த உரையோடு கூடியது. உயர்ந்த நீதிகளைப் போதிப்பது. எவரும் எளிதில் படித்துணரத் தக்கது. விலை அணா 4.

கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை.

இப்புத்தகத்தில் ஆனந்தமாய் அமைந்துள்ள ஒவ்வொரு அத்தியாயத்தைப் படிக்கப் படிக்க ஆனந்தம் உண்டாகும். புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது. வயிறு குலுங்கச் சிரிப்புண்டாகும். இதில், வாயாடிச்சுப்பி மணப்பேச்சு, தாலிகட்ட மறந்து செய்யுங் கலியாணம், கலியாணத்தில் அம்பட்டன் அவஸ்தை, மாப்பிள்ளைக்கு மீசை மொட்டையாதல், கலியாணத்தில் பஞ்சாங்கக்காரர் கலகம், கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்து விடுவது, கலியாணப் பெண்ணே பந்திபரிமாறும் வேடிக்கை, விநோத ஊர்வலம், சுப்பம்மாளின் வேடிக்கை இல்வாழ்க்கை, சித்திரக் குள்ளியின் தெய்வ பக்தி, சுப்பம்மாளின் கெட்டிக்காரத்தனம், சுப்பம்மாளின் கற்பு லக்ஷணம், மண்ணை நம்பி மரமிருக்க மரத்தை நம்பி யிலையிருக்க உன்னை நம்பி நானிருக்க உலகம் பொறுக்கவில்லை என்பது, இரத்தினசாமி பிள்ளையினுடைய இல்வாழ்க்கை முடிவு, முதலிய பல விநோத விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. வேண்டியவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை அணா-5

தருமசீலன் புக்டிபோ,

1/2 பாலகிருஷ்ணன் சந்து, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

மனையடி சாஸ்திரம்.

சௌக்கியமாகவும் சம்பத்துடனும் வாழ விரும்புவோர் வீடு, குளம், கிணறு, தோட்டம் முதலியவைகளை சாஸ்திரப்படி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். கிரந்தம், தெலுங்கு, தமிழ் முதலிய பாஷைகளில் உள்ளவைகளை தமிழில் எளியவசன நடையில புலிவலம் ஆர். கோபால அய்யரால எழுதப்பட்டது. மேற்படி 1-ம் பாகம் விலை ரூபா 1. மேற்படி 2-ம்பாகம் அணா 9. குளம் கிணறு வெட்ட ஜலாசய நிர்மாண சாஸ்திரம் அணா 8. விருக்ஷாதி சம்ரக்ஷண சாஸ்திர தீபிகை அணா 8. கீழ்கண்ட விலாசத்திற் கெழுதவும்.

ஆர். கோபாலய்யர்,

புலிவலம்

விஜயபுரம் போஸ்டு,

தஞ்சாவூர் ஜில்லா